admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-22772060 9443699066

# நமது தின கனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 237 | 4 Pages | 05.07.2026 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 237 | 4 பக்கங்கள் | 05.07.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்**
**அவர்பழி தம்பழி அன்று**

**விளக்கம்:**
இரந்து கேட்கத் தக்கவரைக் கண்டால் அவரிடம் இரக்க வேண்டும்; அவர் இல்லையென்று ஒளிப்பாரானால் அது அவர்க்குப் பழி; தமக்குப் பழி அன்று.

## பொதுமக்கள் தங்களது பிரச்சனைகளை ஆளுநர் மாளிகையில் தெரிவிக்கலாம்: ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் தகவல்

சென்னை ஜூலை 5

மக்கள் பிரச்சனைகளை தீர்க்க த.வெ.க. அரசுடன் இணைந்து செயல்படுவேன். தேவைப்பட்டால் மக்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுமாறு முதலமைச்சரிடம் கூறுவேன். ஆளுநரிடம், அரசிடமும் எதிர்பார்ப்பு இருந்தால் தெரிவியுங்கள், நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம். நமது சமுதாயத்தில் சமூக நல்லிணக்கம்இல்லாமல்போனது தான் மிகப்பெரிய பிரச்சனை என்று கூறியுள்ளார்

புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய ஆளுநர், "மக்கள் பிரச்சனைகளை ஆளுநர் மாளிகையில் தெரிவிக்கலாம். வாக்களித்த மக்களால் பிரச்சனைகளை உணரவும் முடியும்; தீர்வுகளை சொல்லவும் முடியும். மக்கள் பிரச்சனைகளை தீர்க்க தவெக அரசுடன் இணைந்து செயல்படுவேன். அவசியம் எனில் மக்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முதல்வரிடம் வலியுறுத்துவேன். அரசிடமும் எதிர்பார்ப்பு இருந்தால் கூறுங்கள்.. நாம் இணைந்து செயல்படுவோம். நமது சமூகத்தில் நல்லிணக்கம் இல்லாமல் போதுதான் பெரிய பிரச்சனை" என்று பேசியிருக்கிறார்.



மதுரையில் நேற்று பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த ஆளுநர் அர்லேக்கர், சௌராஷ்டிரா கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றிருந்தார். அங்கு மாணவர்களிடம் பேசிய அவர், "துப்பாக்கியை தூக்கிக்கொண்டு போருக்கு போவது மட்டும் தேசபக்தி கிடையாது. நதிகளை மீட்டு எடுப்பதும் தேசபக்தி தான். மதுரை வைகை நதியை பார்த்தேன். நதி இருக்கிறது.. ஆனால், தண்ணீர் எங்கே? இளைஞர்கள் நதியை மீட்டு எடுக்க முன்வர வேண்டும். வைகை நதியை யாரும் சீரமைக்காவிட்டால் நேரடியாக ஆளுநர் மாளிகையே களமிறங்கும்" என்று கூறியிருந்தார். மட்டுமல்லாது மாவட்ட ஆட்சியர், காவல்துறை ஆணையர், மாநகர ஆணையர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் சேர்ந்து நலத்திட்டங்களையும் ஆய்வு செய்திருந்தார்.

## ஈரானில் அயதுல்லா அலி கமெனி உடலுக்கு லட்சக்கணக்கான மக்கள் அஞ்சலி



கடந்த பிப்ரவரி 28ந் தேதி அமெரிக்கா இஸ்ரேல் இணைந்து நடத்திய தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமெனி கொல்லப்பட்டார். போர் காரணமாக அவரது உடல் அடக்கம் உடனடியாக நடைபெறவில்லை. தற்போது அமைதிப் பேச்சுவார்த்தை நடந்து வரும் சூழலில் அயதுல்லா அலி கமெனியின் உடல் அடக்கத்துக்கான இறுதிச் சடங்கு நிகழ்வுகள் இன்று தொடங்கி 6 நாட்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. வருகிற 9ந்தேதி அவரது உடல், ஈரானின் வடகிழக்கு புனித நகரமான மஷாத்தில் அடக்கம் செய்யப்படுகிறது.

அயதுல்லா அலி கமெனியின் உடல் வைக்கப்பட்ட சவப்பெட்டி, தலைநகர் தெக்ரானில் உள்ள மொசல்லா பெரிய மசூதியில் வைக்கப்பட்டது. அந்த சவப்பெட்டி, ஈரான் கொடியால் போர்த்தப்பட்டிருந்தது. மேலும், தாக்குதலில் உயிரிழந்த அவரது ஒரு வயது பேத்தியின் உடல் இருந்த சவப்பெட்டியும் வைக்கப்பட்டிருந்தது. இதையடுத்து அயதுல்லா அலி கமெனியின் உடலுக்கு ஈரான் உயர்மட்ட தலைவர்கள், அதிகாரிகள் அஞ்சலி செலுத்தினர்.ஈரான் பாராளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாப், வெளியுறவுத் துறை மந்திரி அப்பாஸ் அராக்சி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.அப்போது முகமது பாகர்காலிபாப் உள்ளிட்ட பலர் கண்ணீர் விட்டு அழுதனர். மேலும், அயதுல்லா அலி கமெனியின் உடலுக்கு இந்தியா, பாகிஸ்தான், ரஷியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் அஞ்சலி செலுத்தினர். இந்தியா சார்பில் மத்திய வெளியுறவுத்துறை இணை மந்திரி பவித்ரா மார்கெரிட்டா, பீகார் கவர்னர் சையத் அட்டா ஹஸ்னைன் ஆகியோர் அடங்கிய குழுவினர் தங்களது மரியாதையை செலுத்தினர்.அதேபோல் காங்கிரஸ் தலைவர் சல்மான் குர்ஷித், காஷ்மீர் முன்னாள் முதல்மந்திரி மெஹ்பூபா முப்தி மற்றும் இந்தியாவைச் சேர்ந்த சீக்கிய, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதத் தலைவர்களும் அஞ்சலி செலுத்தினர்.

## வாகனங்கள் பழுதாகும்: இந்தியாவிடம் இருந்து பெட்ரோல் வாங்க பூடான் மறுப்பு

புதுடெல்லி ஜூலை 6

இந்தியாவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, 20 சதவீத எத்தனால் கலக்கப்பட்ட 'இ20' பெட்ரோல் பயன்பாடு முழு வீச்சில் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், இந்திய எண்ணெய் நிறுவனங்கள்பூடான் நாட்டிற்கும் இந்த E20 பெட்ரோலை வினியோகம் செய்ய முன்வந்துள்ளன. ஆனால், இந்த சலுகையை ஏற்க பூடான் நாட்டின் வர்த்தகத் துறை அமைச்சகம் திட்டவட்டமாக மறுத்துவிட்டது. தற்போதைய சூழலில் இந்தியாவில் இருந்து இ20 பெட்ரோலை இறக்குமதி செய்யும் எண்ணம் ஏதும் இல்லை என்று பூடான் அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதுகுறித்து பூடான் அரசுத் துறை அதிகாரிகள் மற்றும் அந்த நாட்டின் மிகப்பெரிய எரிபொருள் வினியோக நிறுவனமான 'தாஷி பி.ஓ.டி' ஆகியவை சில காரணங்களை பட்டியலிட்டுள்ளது.

அதாவது சாதாரண பெட்ரோலை விட எத்தனால் கலந்த பெட்ரோல் காற்றில் உள்ள ஈரப்பதத்தையும், தண்ணீரையும் எளிதில் உறிஞ்சும் தன்மை கொண்டது. பூடானில் உள்ள பெரும்பாலான பெட்ரோல் பங்க் நிலத்தடி சேமிப்புத் தொட்டிகள் மிகவும் பழமையானவை.

மேலும், பூடான் ஒரு மலைப்பிரதேசம் என்பதால் நிலத்தடி நீர் இந்தத் தொட்டிகளுக்குள் கசிந்து வர அதிக வாய்ப்புள்ளது. சிறிதளவு தண்ணீர் கசிவு ஏற்பட்டாலும், இ20 பெட்ரோலில் உள்ள எத்தனால் அந்தத் தண்ணீரை உறிஞ்சி, எரிபொருளின் தரத்தையே மாற்றிவிடும்.

அதாவது பெட்ரோல் பால் போன்ற நிறத்திற்கு மாறிவிடும்.இதனால் வாகனங்களின் இன்ஜின்கள் முற்றிலும் பழுதடைந்து, வண்டிகள் பாதியிலேயே நின்றுவிடும் அபாயம் உள்ளது. மலைப்பாங்கான சாலைகளில் வாகனங்களை இயக்க அதிக சக்தி தேவைப்படுகிறது. ஆனால், எத்தனால் கலந்த பெட்ரோல் போதிய மைலேஜ் மற்றும் எனர்ஜியைத் தராது என்பதால் பூடான் நாட்டின் மலைப்பாதைகளுக்கு இது துளியும் சரிவராது என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## மும்பையில் கடல் சீற்றம்: 'கேட்வே ஆப் இந்தியா' செல்ல சுற்றுலா பயணிகளுக்கு தடை



மும்பை, ஜூலை 6

மும்பையில் கனமழை பெய்து வருவதால் கடற்கரைகளில் அலை சீற்றம் அதிக மாக காணப்பட்டது. நேற்று பிற்பகல் 2.50 மணி அளவில் கடலில் 4.26 மீட்டர் உயரத்திற்கு ராட்சத அலை கரையை தாக்கியது. இதனால் கடற்கரைக்கு யாரும் செல்ல வேண்டாம் என மாநகராட்சி அறிவுறுத்தி இருந்தது.

இருப்பினும் கடல் அலையை ரசிக்க ஏராளமான மக்கள் மெரின்லைன், கிர்காவ், வெர்சோவா, பகுதிகளில் கூடினர். அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவர்களை அப்புறப்படுத்தினர். முக்கியமாக மும்பையில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க 'கேட்வே ஆப் இந்தியா' பகுதியில், கடல் சீற்றம் அதிகமாககாணப்பட்டது. கடல் அலை பயங்கர வேகத்தில் கரையை தாக்கியது.

இதனால் அங்கு சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.22 மணி அளவில் ராட்சத அலை எழும்பி கரையை தாக்க உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடல் கொந்தளிப்பாக உள்ளதால் பலத்த காற்று காரணமாக ராட்சத அலை தாக்கும் சமயத்தில் கடற்கரைகளில் இருந்து பொதுமக்கள் விலகி இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



## ஆர் கே நகரில் தமிழக வெற்றிக்கழக ஊடகப் பிரிவு சார்பில் முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு 100 வாகன ஓட்டிகளுக்கு இலவச ஹெல்மெட் வழங்கப்பட்டது

சென்னை ஜூலை 5

தண்டையார்பேட்டை காலரா மருத்துவமனை அருகே தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த் அறிவுரத்துளின்படி ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினரும் நிதித்துறை அமைச்சருமான மரிய வில்சன் வழிகாட்டுதலின்படி தமிழக வெற்றி கழகம் சென்னை வடகிழக்கு மாவட்ட ஊடக அணி ஆர்.கே. நகர் தொகுதி சார்பில் முதல்வர் ஜோசப் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு இருசக்கர வாகன ஓட்டிகள் நலன் கருதி ஊடக அணி அமைப்பாளர் சரவணன் மற்றும் இணை அமைப்பாளர் ராஜ்குமார் ஏற்பாட்டில்100பேருக்குதலைக்கவசம் வழங்கப்பட்டது. இதனை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் சுறா வேலு மற்றும் போக்குவரத்து உதவி ஆய்வாளர் மகேந்திரன் போக்குவரத்து போலீசார் ஆகியோர் இணைந்து பொதுமக்களுக்கு ஹெல்மட்டை அணிவித்து ஹெல்மெட் இல்லாமல் செல்லக்கூடாது என்று ஹெல்மெட்டால் ஏற்படும் பயன்கள் குறித்து விளக்கி ஹெல்மட்டை வழங்கினர்இந்நிகழ்ச்சியில்ஏராளமான தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## பாலக்கோடு சுங்கசாவடியில் ரூ.3 லட்சம் மதிப்பிலான தடைசெய்யப்பட்ட குட்கா பறிமுதல் டிரைவர் கைது



தருமபுரி ஜூலை 05

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு புதிய தேசிய நெடுஞ்சாலை வழியாக குட்கா பொருட்கள் கடத்தி செல்வதாக பாலக்கோடு காவல்துறைனருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. பாலக்கோடு இன்ஸ்பெக்டர் சுப்பிரமணியன் தலைமையில் சுங்கசாவடி பகுதியில் காவல் துறையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பெங்களூரில் இருந்து மதுரை நோக்கி சென்று கொண்டிருந்த சந்தேகத்திற்கிட மான வந்த சொகுசு காரை காவல்துறையினர் தடுத்து நிறுத்தி சோதனை மேற்கொண்டனர். சோதனையில் 20 க்கும் மேற்பட்ட மூட்டைகளில் சுமார் 250 கிலோ அளவிற்கு ரூ. 3 லட்சம் மதிப்பிலான தமிழக அரசால் தடை செய்யப்பட்டுள்ள குட்கா பொருட்கள் கடத்தி வந்தது தெரிய வந்தது. குட்காவுடன்,சுமார் ரூ. 10 லட்சம் மதிப்புள்ள சொகுசு காரை பறிமுதல் செய்த காவல்துறையினர் இது குறித்து வழக்கு பதிவு செய்து மதுரை உசிலம்பட்டியை சேர்ந்த டிரைவர் ￣த்துராமன்(வயது31) என்பவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

## வெகு விமர்சையாக தொடங்கிய ஊடக கிரிக்கெட் திருவிழா



தென்னிந்திய பத்திரிக்கையாளர் யூனியன் சங்கம் சார்பாக போதைக்கு எதிராக விளையாட்டை கையில் எடு என்ற தலைப்பில் நடத்தும் media championship 2026 கிரிக்கெட் போட்டி நடைபெற்ற வருகிறது இந்த போட்டியில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு சட்டப் பேரவை சபாநாயகர் ஜே சி டி பிரபாகர் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத், சென்னை மாநகர் காவல் ஆணையர் அமல்ராஜ் ஆகியோர் கலந்து விளையாட்டு போட்டியை தொடங்கி வைத்தனர்...

இந்த போட்டியை தொடங்குவதற்கு முன்பாக விளையாட்டு வீரர்களுடன் சபாநாயகர் வசிக்க போதை பொருள் எதிராக உறுதிமொழி ஏற்கப்பட்டது அத்துடன் போதை போல் எதிராக சபாநாயகர், அமைச்சர்,காவல் ஆணையர் உள்ளிட்டோர் கையத்திட்டனர்கள்

அதனைத் தொடர்ந்து முதல் போட்டி வசந்த் தொலைக்காட்சி மற்றும் பூந்தமல்லி பத்திரிகையாளர் சங்கம் இடையே நடைபெற்ற போட்டியை சபாநாயகர் டாஸ் போட்டு தொடங்கி வைத்தார்...

அதனைத் தொடர்ந்து சபாநாயகர் அமைச்சர் காவல் ஆணையர் உள்ளிட்டூர் மைதானத்தில் இறங்கி விளையாட்டினை போட்டினை தொடங்கி வைத்தனர்..

காவல் ஆணையர் அமல்ராஜ் பேச்சு

போதைக்கு எதிராக அரசு மட்டும் தான் போராட வேண்டும் என்று. ஒண்ணும் இல்லை நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டாலே போதையை முழுவதுமாக ஒளித்துக் காட்டலாம்...

மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் பேச்சு

போதை போல் எதிராக நீங்கள் நடத்தும் இந்த கிரிக்கெட் போட்டிக்கு என்னுடைய வாழ்த்துக்கள் இது போன்ற நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்த வேண்டும் போதைப் பொருள் எதிராக பல்வேறு நிகழ்ச்சிகளை ஊடகத்துறையினர் நடத்தினால்தான் மக்களுக்கு மிகப்பெரிய விழிப்புணர்வு இருக்கும்..

போதைப்பொருள் ஒழிப்பதற்கு அரசாங்கம் மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது மக்களும் உறுதுணையாக நின்று அதை தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்க வேண்டும் இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்தும் போதுதான் போதை போல் எதிராக விழிப்புணர்வு ஏற்படும்..

சபாநாயகர் ஜே சி டி பிரபாகர் பேச்சு

தென் இந்திய பத்திரிகையாளர் யூனியன் இந்த பொருளை கையில் எடுத்திருப்பதை நான் மனதார பாராட்டுகிறேன். தன் கடமையை செம்மையாக சீராக செய்ய இருக்கிறது என்பது அடையாளம் தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பை இருந்து முனைப்போடு அந்த பணிகளைசெய்வதற்காக பல்வேறு முனைப்பான திட்டங்களை எல்லாம் இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே போதை இல்லாத ஒரு மாநிலமாக தமிழ்நாட்டை நிச்சயமாக போதையில்லாத ஒரு சமூகமாக உருவாக்க வேண்டும் என்பதில் அவர் எத்தனை அக்கறையாக இருக்கிறார் என்பதை நாம் செய்தித்தாள்கள் மூலமாக ஊடகங்கள் மூலமாக அன்றாடம் தெரிந்து கொண்டு வரும் கடுமையான நடவடிக்கை எல்லாம் எடுக்கப்பட்டு வருகிறது இன்னும் தீவிர படுத்துவதற்கான முறையான சட்டங்கள் எல்லாம் தயார்படுத்தப்பட்டுவருகிறது.உணர்வு என்பது ரொம்ப அவசியமானது என்பதையும் அடிமையானவர்கள் எப்படி மீட்பது குறித்தும் பேசினார்கள்.. விளையாட்டை கையில் எடுப்பது தான் போதையை ஒழிப்பதற்கு சிறந்த வழியாக இருக்கும்...

அதனைத் தொடர்ந்து செய்தியாளர் இடம் பேசிய மின்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத்போ தைப் பொருளுக்கு எதிராகவிழிப்புணர்வுமிகவும்முக்கியமாக தேவை.

போதையில்லா தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்பது முதல் அமைச்சரின் கனவு அதற்கான சப்போர்ட் அனைவரும் செய்வோம்.

அரசு பார்த்துக் கொள்ளும் அரசு அதிகாரிகள் பார்த்துக் கொள்ளும் என இருக்காமல் ஒவ்வொருவரும் பொறுப்பாக இருக்க வேண்டும்.

சொந்தக்காரர்கள் நண்பர்கள் பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் என அனைவரிடமும் போதை

தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி மனித ஒழுக்கத்தை கடைப்பிடித்தால் போதை இல்லா சமூகத்தை உருவாக்கலாம். அனிதா ராதாகிருஷ்ணன் கைது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் ஸ்ரீநாத்,

சட்டம் அவர்களது கடமையை செய்கிறார்கள்,

இது பழிவாங்கும் நோக்கம் கிடையாது ஆறு மாதத்தில் தேர்தல் வரலாம் என்ற ஸ்டாலினின் கருத்துக்கு பதில் அளித்த அமைச்சர் ஸ்ரீநாத்,

சவாலை எதிர்கொள்ள நாங்கள் தயாராக உள்ளோம், தலைவர் சொல்வது போல நல்லதே நடக்கும், கான்ஃபிடண்டாக இருப்போம்.

தினகனி

05.07.2026

# எத்தனால் இ 20 பற்றி சமூக வலைதளங்களில் பரப்பப்படும் தவறான தகவல்களுக்கு விளக்கம்

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பத்திரிக்கை மற்றும் தகவல் தொடர்பு அலுவலகத்தில் எத்தனால் இ 20 பற்றி சமூக வலைதளங்களில் பரப்பப்படும் தவறான தகவல்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் முன்னாள் DGM கேசவன், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் அருண் , தொழில் முனைவர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்து பேசினார்கள்

அப்பொழுது பேசிய அவர்கள் ஒரு லிட்டர் எத்தனால் தயாரிக்க 10 ஆயிரம் லிட்டர்தண்ணீர்தேவைப்படுவதாக சமூக வலைதளங்களில் பரவி வரும் தகவல் உண்மைக்கு புறம்பானது. சர்க்கரை உற்பத்திக்குப் பிறகு கிடைக்கும் மொலாசஸ் உள்ளிட்ட வேளாண் மூலப்பொருட்களில் இருந்தே பெரும்பாலான எத்தனால் தயாரிக்கப்படுகிறது. மேலும், Zero Liquid Discharge (ZLD) போன்ற நவீன தொழில்நுட்பங்கள் மூலம் நீர் பயன்பாடு கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எத்தனால் புதிய எரிபொருள் அல்ல என்றும், உலகின் பல நாடுகளில் பல ஆண்டுகளாக எத்தனால் கலந்த பெட்ரோல் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். இந்தியாவில் கடந்த ஆண்டு முதல் E20 பெட்ரோல் நாடு முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் E20 எரிபொருளைப் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் விளக்கமளித்தார்.

E20 பெட்ரோலை பயன்படுத்துவதால் இன்ஜின் சேதமடையும், மைலேஜ் குறையும், வாகனத்தின் இயக்கத்திறன் பாதிக்கப்படும், காப்பீடு அல்லது வாரண்டி ரத்து செய்யப்படும் என்பது போன்ற தகவல்களுக்கும் எந்த ஆதாரமும் இல்லை என்று அவர் தெரிவித்தார். இந்திய ஆட்டோமொட்டிவ் ஆராய்ச்சி சங்கம் (ARAI), இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம் மற்றும் வாகன உற்பத்தியாளர்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்வுகளில் E20 எரிபொருள் பாதுகாப்பானது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மேலும், E20 பெட்ரோல் பயன்பாட்டால் கார்பன் மோனாக்சைடு, ஹைட்ரோகார்பன் உள்ளிட்ட மாசு உமிழ்வு குறைவதோடு, நாட்டின் கச்சா எண்ணெய் இறக்குமதி செலவும் குறைகிறது என்றார். இதன் மூலம் அந்நியச்செலாவணி சேமிக்கப்படுவதுடன், கரும்பு விவசாயிகள் மற்றும் உயிரி எரிபொருள் உற்பத்தியாளர்களின் வருமானமும் அதிகரிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பெட்ரோலில் எத்தனால் கலப்பது மத்திய அரசின் எத்தனால் கலப்பு திட்டத்தின் (EBP) ஒரு பகுதியாகும் என்றும், 201415 ஆம் ஆண்டில் 1.5 சதவீதமாக இருந்த எத்தனால் கலப்பு தற்போது 20 சதவீதத்தை எட்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.



இந்த திட்டத்தின் மூலம் அந்நியச் செலாவணியில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் சேமிக்கப்பட்டதுடன், விவசாயிகளுக்கு நிலுவைத் தொகைகளும் விரைவாக வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இறுதியாக, சமூக வலைதளங்களில் பரவும் வதந்திகளை நம்பாமல், மத்திய பெட்ரோலிய அமைச்சகம் மற்றும் எண்ணெய் நிறுவனங்கள் வெளியிடும் அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டுமே பொதுமக்கள் பின்பற்ற வேண்டும் என்று கேசவன் வலியுறுத்தினார்.

எத்தனால் புதிய எரிபொருள் அல்ல என்றும், உலகின் பல நாடுகளில் பல ஆண்டுகளாக எத்தனால் கலந்த பெட்ரோல் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். இந்தியாவில் கடந்த ஆண்டு முதல் E20 பெட்ரோல் நாடு முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் E20 எரிபொருளைப் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் விளக்கமளித்தார்.

E20 பெட்ரோலை பயன்படுத்துவதால் இன்ஜின் சேதமடையும், மைலேஜ் குறையும், வாகனத்தின் இயக்கத்திறன் பாதிக்கப்படும், காப்பீடு அல்லது வாரண்டி ரத்து செய்யப்படும் என்பது போன்ற தகவல்களுக்கும் எந்த ஆதாரமும் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

இந்திய ஆட்டோமொட்டிவ் ஆராய்ச்சி சங்கம் (ARAI), இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம் மற்றும் வாகன உற்பத்தியாளர்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்வுகளில் E20 எரிபொருள் பாதுகாப்பானது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மேலும், E20 பெட்ரோல் பயன்பாட்டால் கார்பன் மோனாக்சைடு, ஹைட்ரோகார்பன் உள்ளிட்ட மாசு உமிழ்வு குறைவதோடு, நாட்டின் கச்சா எண்ணெய் இறக்குமதி செலவும் குறைகிறது என்றார். இதன் மூலம் அந்நியச்செலாவணி சேமிக்கப்படுவதுடன், கரும்பு விவசாயிகள் மற்றும் உயிரி எரிபொருள் உற்பத்தியாளர்களின் வருமானமும் அதிகரிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பெட்ரோலில் எத்தனால் கலப்பது மத்திய அரசின் எத்தனால் கலப்பு திட்டத்தின் (EBP) ஒரு பகுதியாகும் என்றும், 201415 ஆம் ஆண்டில் 1.5 சதவீதமாக இருந்த எத்தனால் கலப்பு தற்...

# திருப்பத்தூரில் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் சிப்காட் கொண்டுவர முதலமைச்சரின் பார்வைக்கு கொண்டு சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் : அமைச்சர் தகவல்

திருப்பத்தூர்:ஜூலை:5,

திருப்பத்தூர் மாவட்டத்திற்கு வனத்துறை அமைச்சர்இரஞ்சித்குமார்மாவட்ட வளர்ச்சி குறித்த திட்ட பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், 01 பயனாளிக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 14 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.12.88 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வனத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து வனத்துறை அமைச்சர் ஆர்.வீ.இரஞ்சித்குமார் ஆய்வு செய்தார். இந்நிகழ்வில், ஆட்சியர் கு.ரவிகுமார் சட்டமன்ற மாவட்ட உறுப்பினர்கள் டாக்டர்.



நா.திருப்பதி (திருப்பத்தூர்), ஆ.செ.வில்வநாதன் (ஆம்பூர்), எஸ்.எஸ்.பி. சையத் பாரூக் பாஷா (வாணியம்பாடி) மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர். இக்கூட்டத்தில், வனத்துறை அமைச்சர் ஆர்.வீ. இரஞ்சித்குமார் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் நலன் கருதி அடிப்படை தேவைகள் தங்கு தடையின்றி பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டுமென ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொறுப்பு அமைச்சர்களை நியமித்து, ஆய்வுக் கூட்டம் நடத்தி, அரசு திட்டங்கள் பொதுமக்களை சென்றடைவதை உறுதி செய்ய அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான ஆட்சியில், பொதுமக்களுக்கு எந்த ஒரு குறைகளும் இருக்கக் கூடாது. குறிப்பாக குடிநீர், மின்சார வசதி, கழிவுநீர் கால்வாய், தெரு விளக்குகள் உள்ளிட்ட அடிப்படை தேவைகளையும், மண் சாலைகளை தார் சாலையாக அமைப்பது, சுடுகாட்டு பாதை அமைப்பது போன்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை கண்டறிந்து, அவற்றிற்கு உடனடி மற்றும் நிலையான தீர்வுகளை ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகளை அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

முன்னதாக, மாவட்ட அலுவலக வளாகத்தில், ஆட்சியர் மாற்றுத்திறனாளிகள்நலத்துறையின்சார்பில், 03 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.114,400/ மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட நியோ போல்ட்களையும், 09 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,05,000/ மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகளையும். 02 மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையும் (UDID) மற்றும் 01 பயனாளிக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் மருத்துவ காப்பீடு அட்டை எனமொத்தம் 15 நபர்களுக்கு ரூ.12 இலட்சத்து 88 ஆயிரத்து 200/ மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வனத் துறை அமைச்சர் வழங்கினார்.

# பணி நிரந்தரம் செய்யக்கோரி டாஸ்மாக் பணியாளர்கள் மீண்டும் போராட்டம்; திருச்சி கூட்டத்தில் தீர்மானம்

திருச்சி, ஜூலை 5

தமிழ்நாடு அரசு டாஸ்மாக் பணியாளர் சங்க மாநில செயற்குழு கூட்டம் திருச்சியில் நடைபெற்றது. மாநில துணைத் தலைவர் பி. முருகானந்தம் தலைமை தாங்கினார். மாநிலத் தலைவர் மு.கு.பழனிபாரதி, மாநில பொதுச்செயலாளர் ம. கோதண்டம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கிப் பேசினர்.

இதில் மாநில பொருளாளர் சா. சுரேஷ், மாநில இணை பொதுச் செயலாளர் மே.மரகதலிங்கம், மாநில தலைமை நிலைய செயலாளர் சி. முத்துக்குமரன், மாநில துணைத் தலைவர்கள் இரா. கண்ணையன், ஜி. அருணகிரிமுருகன், கி. முருகேசன், கா. இளங்கோவன், மாநில செயலாளர்கள் வீ. கோவிந்தராஜன், கே.இராமர்பாண்டியன், ஏ. மோகன், தா. உமாபதி உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் அதிகளவில் கலந்து கொண்டனர்.

தமிழக டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் 24,000



பணியாளர்களை பணி நிரந்தரம் செய்து கேரளா போன்று அரசு பணியாளர்களுக்கு இணையான ஊதியம் இதர பணப்பயன்கள் வழங்க வேண்டும். காலி பாட்டில் வாங்க தனி முகமை ஏற்படுத்த வேண்டும்ஓ ய்வு வயதை 60ஆக உயர்த்துவதோடு, மதுபான கூடமின்றி மதுக்கடைகள் அரசின் சொந்த கட்டிடத்தில் இயங்க வழிவகை ஏற்படுத்த வேண்டும். எப்எல் 2 தனியார் மதுக்கூடங்களில் உரிய அதிகாரிகளை தவிர மற்றவர்கள் ரீல்ஸ் எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டு அச்சுறுத்துவது போன்ற செயல்களை தடுக்க வேண்டும் என்று மதுரை உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

இதேபோல தமிழக அரசு நடத்தும் டாஸ்மாக் கடைகளிலும், டாஸ்மாக் பணியாளர்களைதாக்குவது, வன்முறையில்ஈடுபடுவோருக்கும் இதே போல டாஸ்மாக் நிர்வாகம் வழக்கை தொடுத்து பணியாளர்களுக்கு பணி பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த மாதம் 14 மாவட்டங்களில் 4 நாட்கள் தொடர் கடை அடைப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டபோது அதைத் தொடர்ந்து மதுவிலக்கு ஆயத் தீர்வைத்துறை அமைச்சர் விக்னேஷ் சங்கப் பிரதிநிதிகளை டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் அழைத்து பேசி 30 நாட்களுக்குள் மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக உறுதி அளித்தார். ஆனால், இதுவரை எவ்வித கோரிக்கையும் நிறைவேறவில்லை.

ஆகவே, இதனை வலியுறுத்தி வருகிற ஏழாம் தேதி தமிழகத்தில் உள்ள 5 முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது எனவும், அடுத்த கட்டமாக ஜூலை 10ம் தேதியன்று தமிழகம் முழுவதும் உள்ள 38 மாவட்ட மேலாளர் அலுவலகங்களில் தொடர் காத்திருப்பு போராட்டத்தை தமிழ்நாடு அரசு டாஸ்மாக் பணியாளர் சங்கம் மற்றும் டாஸ்மாக்கில் உள்ள தோழமை சங்கங்களின் கூட்டமைப்போடு இணைந்து நடத்தவுள்ளது என தீர்மானிக்கப்பட்டது.

# முதியவரை இருசக்கர ாகனத்தில் அழைத்துச் சென்று விடுவதாக கூறி வழிப்பறியில் ஈடுபட்ட வாலிபர் கைது

கிருஷ்ணகிரி, ஜூலை 5

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் தாலுக்கா பர்கூர் பேருந்து நிலையத்திலிருந்து சின்ன பர்கூர் பகுதியில் உள்ள வீட்டிற்கு நடந்து சென்ற முதியவரை நான் உங்களை விட்டு விடுகிறேன் என்று கூறி அழைத்துச் சென்று அவரை தாக்கி பணம் ரூபாய் 1200 செல்போன் மற்றும் வெள்ளி அரைநான் கயிறு ஆகியவற்றை பறித்து சென்றதாக பர்கூர்காவல்நிலையத்தில் சின்னப்பன் வயது 72 சின்ன பர்கூர் பகுதியைச் சேர்ந்தவர் புகார் அளித்ததின் பேரில் பர்கூர் காவல்



ஆய்வாளர் அன்பழகன் தலைமையில் சிறப்பு தனிப்படை அமைத்து பர்கூர் காவல்துறையினர் விசாரணை செய்ததில் மணிகண்டன் வயது 22 தகப்பனார் பெயர் வெங்கடேசன் ராமசாமி நகர் எமகல்நத்தம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் கைது விசாரணை செய்து முதியவரிடமிருந்து பறித்துச் சென்ற செல்போன் பணம் மற்றும் அரைநாள் கயிறு வழிப்பறிக்கு பயன்படுத்திய இரு சக்கர வாகனம் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர் பின்னர் நீதிமன்ற காவலுக்கு தர்மபுரி மாவட்ட சிறைக்கு அனுப்பப்பட்டார் குற்றச்செயலில் ஈடுபட்ட ஒரு சில மணி நேரங்களிலே குற்றவாளியை கண்டுபிடித்ததற்கு பொதுமக்கள் பர்கூர் காவல்துறையினரை வெகுவாக பாராட்டு வருகின்றனர்

# வேலூர் மாவட்ட டாஸ்மாக் பொது மேலாளரை பதவி இடை நீக்கம் செய்ததை கண்டித்து ஆர்ப்பாட்டம்

வேலூர் தோட்டப்பாளையத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில வாணிபக் கழக அலுவலகத்தில் செயல்பட்டு வரும் டாஸ்மாக்

மாவட்ட மேலாளர் அலுவலக வாயிலில் அனைத்து சங்க தொழிலாளர்கள் சார்பில் தமிழக அரசை கண்டித்து தொமுச மாநில பொருளாளர் கோவிந்தராஜ்

தலைமையில் கண்டன



ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இதில் நேர்மையான முறையில் பணி செய்து வரும் மாவட்ட பொது மேலாளர் சத்தியனை எந்த வித முன்னறிவிப்புமின்றி பதவி இடை நீக்கம் செய்த நிர்வாக இயக்குநர் மற்றும் துறை அமைச்சரை கண்டித்தும், இடைநீக்கத்தை ரத்து செய்து மீண்டும் பணியமர்த்த கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இதில் வேலூர் மாவட்ட தலைவர் ஆனந்த குமார் துணைத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி ராணிப்பேட்டை தலைவர் பாபு, திருப்பத்தூர் தலைவர் ராஜேஷ்கண்ணா மற்றும் அனைத்து சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஓபிசி சமுதாயங்களை சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை வழங்கும் விழா

கோவை ஜூலை:05

கோவை திருச்சி சாலை வெங்கடலட்சுமி கல்யாண மண்டபத்தில் ஓபிசி சமுதாயங்களை சேர்ந்த சிறப்பான மதிப்பெண்கள் பெற்ற, ஏழை மாணவர்களுக்கு சுமார் 10 லட்சம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஓபிசி நிர்வாகிகள், உதவித் தொகையை வாங்கிய பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் இதை அடுத்து





வருகின்ற 12.07.2026 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நமது இயக்கம் நடத்துகின்ற ஒரு கருத்தரங்கம்" ஓபிசி மக்களின் இன்றைய நிலையும் ஜாதிவாரி கணக்கெடுப்பும் "என்ற தலைப்பில் மிகப்பெரிய ஒரு நிகழ்வு சென்னை ராயப்பேட்டை பீட்டர்ஸ் சாலையில் உள்ள இ.என். சேஷ மகாலில் நடைபெற உள்ளது.இந்த நிகழ்வில் அகில இந்திய தலைவர்கள் சூரஜ் மண்டல் (மண்டல் கமிஷன் B.P. மண்டல் அவர்களுடைய பேரன்) அகில இந்திய ஓபிசி மாணவர்கள் சங்கத்தின் தேசிய தலைவர்,டிஆர். கிரண்குமார், அசோக் வரதன் ஷெட்டி ஐஏஎஸ் மற்றும் மாநில பிஜேபி தவெ க,திமுக,அதிமுக தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள் என்று தெரிவித்தார்.

# தருமபுரி நகராட்சியில் லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் அதிரடி சோதனை கணக்கில் வராத ரூ . 50,000 பறிமுதல்

தருமபுரி ஜூலை 05

தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு காவல் துணை கண்காணிப்பாளர் நாகராஜன் தலைமையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் பெருமாள்மற்றும்காவல் துறையினர் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி அளவில் திடீரென நுழைந்து உள்புறமாக கேட்டை பூட்டிக் கொண்டு சோதனையில் ஈடுபட்டனர் . இந்த சோதனை 5 மணி நேரத்திற்கு மேலாக சோதனைநடைபெற்றது. அப்போது பல்வேறு ஆவணங்கள் மற்றும் கணக்கில் வராத ரூ. 50,000 சிக்கியது. இது தொடர்பாக அந்த அலுவலகத்தில் இருந்த பணியாளர்களிடம் லஞ்ச ஒழிப்பு காவல் துறையினர் தீவிர விசாரணை நடத்தினார்கள். இதனால் தருமபுரியில் பரபரப்பு ஏற்பட்டது.

# சேலம் சோனா கல்லூரியில் சோனா ஸ்டார் அறிமுகம்!

சேலம், சோனா ஸ்டார்ன் அங்கமான ஸ்கேல் அமெரிக்காவின் வெஸ்ட் அலபாமா பல்கலைக்கழகத்துடன் இணைந்து, (டேட்டா சயின்ஸ்) துறையில் MS படிப்பிற்கான, இந்தியாவில் முதன்முறையான 'இந்தோஅமெரிக்க 1+1 சர்வதேச வழித்தடத் திட்டத்தை' (IndoUS 1+1 International Pathway Program) சோனா ஸ்டார் அறிமுகப் படுத்துகிறது.

இந்தியாவின் பெங்களூருவில் உள்ள SCALE (சோனா மேம்பட்ட கற்றல் மற்றும் தொழில்முனைவோர் மையம்), அமெரிக்காவின் மேற்கு அலபாமா பல்கலைக்கழகத்துடன் (UWA) இணைந்து, தரவு அறிவியலில் முதுகலைப் பட்டத்திற்கான (MS in Data Science) ஒரு முன்னோடியான 1+1 சர்வதேசப் பாதை திட்டத்தைத் தொடங்குவதாக அறிவித்துள்ளது. இத்திட்டம், இந்திய மாணவர்கள் செப்டம்பர் 2026 முதல் பெங்களூருவில் உள்ள SCALE மையத்திலும், செப்டம்பர் 2027 முதல் அமெரிக்காவின் UWA மையத்திலும் முதல் ஆண்டை (15 கிரெடிட்கள்) முடிப்பதன் மூலம், STEMசார்ந்த முதுகலைப் பட்டத்தைப் பெறுவதற்கான மலிவான மற்றும் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாதையை வழங்குகிறது.

தனிப்பயனாக்கப்பட்ட கல்வி ஆதரவை உறுதி செய்வதற்காக, முதல் தொகுதி 30 மாணவர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக நிரலாக்கம், தரவுஅறிவியல்,செயற்கை நுண்ணறிவு, இயந்திரக் கற்றல், பெருந்தரவுப் பகுப்பாய்வு, இணையப் பாதுகாப்பு, வணிக நுண்ணறிவு, புள்ளியியல் மாதிரியாக்கம் மற்றும் தரவுக் காட்சிப்படுத்தல் ஆகியவை உள்ளன. இது பட்டதாரிகளை அதிகத் தேவை உள்ள உலகளாவிய பணிகளுக்குத் தயார்படுத்துகிறது என்று சோனா கல்விக் குழுமத்தின் துணைத்தலைவர் தியாகு வள்ளியப்பா தெரிவித்தார்.

இத்திட்டத்தின் முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்று இதன் குறைவான கட்டண அமைப்பாகும்;



அமெரிக்காவில் முழுப் பட்டப்படிப்பையும் முடிப்பதோடு ஒப்பிடுகையில், மாணவர்கள் இதில் 75% வரை செலவை மிச்சப்படுத்த முடியும். தகுதியுள்ள மாணவர்கள் 5,000 அமெரிக்க டாலர்கள் வரையிலான கல்வி உதவித்தொகையைப் பெற வாய்ப்புள்ளது; மேலும், STEM பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட இத்திட்டத்தை நிறைவு செய்பவர்கள், அமெரிக்காவில் மூன்று ஆண்டுகள் வரையிலான 'விருப்பத் திறன் பயிற்சி' (OPT) வாய்ப்பைப் பெறலாம். கணினி அறிவியல் (Computer Science), தகவல் தொழில்நுட்பம் (IT), AI & ML, தரவு அறிவியல் (Data Science), ECE, BCA, MCA, B.Sc., M.Sc. மற்றும் அது சார்ந்த துறைகளைச் சேர்ந்த பட்டதாரிகள் இதில் சேரலாம்; அதேவேளையில், தரவு அறிவியல் துறை சார்ந்த பணிக்கு மாற விரும்பும் பணிபுரியும் நிபுணர்களுக்கும் இத்திட்டம் மிகவும் ஏற்றது என்று டீன் டாக்டர். வேணுகோபால் மற்றும் சிலன் மிஸ்ரா தெரிவித்தனர்.

105 ஆண்டுகால பாரம்பரியம் கொண்ட 'சோனா வள்ளியப்பா குழுமத்தின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டம், புதுமை மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பு மூலம் உலகத்தரம் வாய்ந்த கல்வியை வழங்குவதில் ஸ்கேல் கொண்டுள்ள அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது. இந்த நிகழ்வில் சோனா கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள், இயக்குனர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். செப்டம்பர் 2026ல் தொடங்கவுள்ள வகுப்புகளுக்கான மாணவர் சேர்க்கை தற்போது நடைபெற்று வருகிறது.

தினகனி

05.07.2026

# கர்நாடகாவில் இருந்து கொண்டு வந்து தனியார் தோட்ட குடோனில் பதுக்கி வைத்திருந்த சுமார் 100 டன் யூரியாவை காவல் துறையினர் கைப்பற்றி விசாரணை



கோவை கும்பண்டம்பாறை கிராமத்தில் முருகேசன் மகன் பாலகிருஷ்ணன் கோவை புதூர் சார்ந்தவர் இவருக்கு சொந்தமான கொம்மாண்டாம்பாறை கிராமத்தில் உள்ள 5 ஏக்கர் தோட்டத்தில் உள்ள குடோனில் சுமார் 100 டன் யூரியா பதுக்கி வைத்திருப்பதாக காவல் நிலையத்திற்கு கிடைத்த தகவலின் பெயரில், காவல் ஆய்வாளர் நந்தகுமார் அவர்கள் அங்கு சென்று விசாரணை மேற்கொண்டு, மேற்படி தோட்டத்தில் 1 ஏக்கர் நிலத்தை TERRA POLIMERS என்ற நிறுவனத்தை சேர்ந்த ஆஷிப் கே. அலி, பெரும்பாவூர், எர்ணாகுளம், கேரளா என்பவர் கடந்த ஒரு வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் குத்தகைக்கு எடுத்து, தகுந்த ஆவணங்கள் இன்றி யூரியாவை கர்நாடகா மாநிலத்தில் இருந்து வாங்கி வந்து மேற்படி தோட்டத்தில் உள்ள குடோனில் வைத்து கேரளாவிற்கு கொண்டு செல்வது தெரியவந்துள்ளது. மேற்படி குரோனில் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 100 யூரியா மற்றும் இரண்டு லாரிகள் ஓட்டுநர் சேலம் எடப்பாடி சார்ந்த கருப்பண்ணன் மகன் செல்வம்(52) மற்றும் லாரியை உணவு பாதுகாப்பு துறை காவல் ஆய்வாளர் முரளிதரன், உதவி ஆய்வாளர் குணபிரகாஷ் மற்றும் மதுக்கரை விவசாயத்துறை இணை இயக்குனர் நாமதுல்லா ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

# காருண்யா பல்கலைக்கழக 33வது பட்டமளிப்பு விழா




கோவை ஜூலை:05

கோவை, காருண்யா தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் கல்வி நிறுவனத்தின் பல்கலைக்கழகம் 33வது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள டி.ஜி.எஸ். தினகரன் கலையரங்கில் நடைபெற்றது. துணைவேந்தர் பேராசிரியர் எலைஜா பிளசிங் வரவேற்றார். மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோமோட்டிவ் வணிகப் பிரிவுத் தலைவர் மற்றும் மஹிந்திரா எலக்ட்ரிக் ஆட்டோமோட்டிவ் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஆர். வேலுசாமி முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு பட்டமளிப்பு விழா பேருரை நிகழ்த்தினார். மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் சவால்களை எதிர்கொண்டு, சமுதாய முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் தலைவர்களாக உருவாக வேண்டும் என்று வலியுறுத்தினார். கௌரவ முனைவர் பட்டத்தைப் பெற்ற அவர், கற்றல் என்பது வாழ்நாள் முழுவதும் தொடரும் பயணம் என்றும், புதுமை மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் மனிதகுலத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்றும் கூறினார்.

காருண்யா நிகர்நிலைப் பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் பால் தினகரன் தலைமை தாங்கி தங்கங்களின் படிப்புகளை வெற்றிகரமாக முடித்த மாணவ மாணவியருக்கு பட்டங்களை வழங்கி, பட்டம் பெற்ற மாணவ மாணவிகளை வாழ்த்தி பேசியதாவது: உங்கள் வாழ்க்கையில் மிகுந்த மகிழ்ச்சியளிக்கும் ஒரு நாள். கடின உழைப்பு, விடாமுயற்சி, ஒழுக்கம், அர்ப்பணிப்பு ஆகியவற்றின் பலனாக நீங்கள் பட்டங்களைப் பெறுகிறீர்கள். காருண்யா பல்கலைக்கழகத்தில் நீங்கள் தரமான கல்வியை மட்டுமல்ல, உயர்ந்த ஒழுக்க நெறிகளையும், மனிதநேய பண்புகளையும் கற்றிருக்கிறீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில், பெற்றோர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு அமர்ந்திருக்கும் ஒவ்வொரு பட்டதாரியின் வெற்றிக்குப் பின்னாலும் பெற்றோரின் தியாகம் இருக்கிறது. இந்த வெற்றி உங்களுடையது மட்டுமல்ல உங்கள் பெற்றோர்களின் வெற்றியும் கூட, அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டம் பெற்ற மாணவர்கள் தங்களின் சமூக பொறுப்பின் வெளிப்பாட மாற்றுத்திறனாளிக்கு வீல் சேர்கள் மற்றும் மூன்று சக்கர ஸ்கூட்டர் வழங்கினர். வேந்தர் விருதுகள் லெட்டிஷியா வழங்கப்பட்டது. முன்னதாக, ஆர். வேலுசாமி அவர்களின் தலைமைத்துவத்தையும், சேவைகளையும் பாராட்டி, கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

# மாம்புள்ளி கிராமத்தில் புனித பிரான்சீஸ் சவேரியார் தேவாலயத்தின் 31ஆம் ஆண்டு தேர் பவனி திருவிழா



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் அருகே திருவாலங்காடு ஊராட்சி மாம்புள்ளி கிராமத்தில் புனித பிரான்சீஸ் சவேரியார் தேவாலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் 31 ஆம் ஆண்டு தேர் பவனி திருவிழா கடந்த 26ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு பேண்ட் வாத்தியம் இசை நிகழ்ச்சியுடன் வாணவேடிக்கைகள் முழங்க மலர் மற்றும் மின் அலங்காரத்துடன் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தேர் பவனியில் புனித பிரான்சிஸ் சவேரியார், மாதா, சம்மனசு ஆகியோர் எழுந்தருளி கிராம மக்களுக்கு

காட்சியளித்தனர் பின்னர் தேர் பவனி திருவிழா நடந்தது. முன்னதாக சவேரியார் ஆலயத்தில் இருந்து தொடங்கிய தேர்பவனி முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்து ஆலயத்தை வந்தடைந்தது. இதில் இறைமக்கள் தங்கள் வீடுகள் தோறும் சாம்பிராணி தூபம் மற்றும் மெழுகு வர்த்தி ஏந்தி வழிபாடு நடத்தினர். அதனைத் தொடர்ந்து குத்தாலம் பங்குத் தந்தை சேவியர் தலைமையில் திருவிழா திருப்பலி நடந்தது. பின்னர் கொடி இறக்கம் நிகழ்ச்சி நடைபெற்று இறைமக்கள் அனைவருக்கும் உணவு உபசரிப்பு நடைபெற்றது இந்த நிகழ்வில் மாம்புள்ளி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டு இறை ஆசி பெற்றனர். விழா ஏற்பாடுகளை மாம்புள்ளி கிராம தலைவர்கள், கிராமவாசிகள், மற்றும் விழா குழுவினர், இளைஞர் நற்பணி மன்றத்தினர் உள்ளிட்டோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# இலவச மருத்துவ முகாம் மற்றும் கண் பரிசோதனை முகாம்




இந்திய செஞ்சிலுவை சங்கம், கூடலூர் மின்சார வாரியம், கூடலூர் நுகர்வோர் மனித வள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், ஆகியன இணைந்து நடத்திய முகாமுக்கு கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் தலைமை தாங்கினார்.

உதவி செயற் பொறியாளர் தமிழரன், உதவி மின் பொறியாளர்கள் மஜீத், கார்த்திக், ஹரி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மின்சார வாரிய செயற் பொறியாளர் முத்துக்குமார், நல்லோர் வட்ட மாநில தலைவர் பாலு ஆகியோர் முகாமினை துவக்கி வைத்தனர்.

செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு மருத்துவர் சிவபிரசாத்,

மருந்தளுநர் நவீன், நிர்வாக அலுவலர் லாய்சன்,

செவிலியர் கிரிஜா உள்ளிட்டோர் இரத்த அழுத்தம் இரத்த சர்க்கரை அளவு மற்றும் பொது மருத்துவ பரிசோதனை செய்தனர். கண் தொழில்நுட்புனர் பாக்கியலட்சுமி உள்ளிட்ட குழுவினர் கண் பரிசோதனை மேற்கொண்டனர்.

முகாமில் 100க்கு மேற்பட்டோர்கலந்துகொண்டு பயன்பெற்றனர். 75 பேருக்கு கிட்ட பார்வைக்கான கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

# வேலூரில் தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை ஊழியர் சங்க 1 நாள் உண்ணாவிரத போராட்டம்




தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை ஊழியர் சங்கம் மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை மற்றும் மாநில அரசு தணிக்கை துறை ஆய்வாளர் மன்றம் சார்பாக

தமிழக நிதி அமைச்சரின் உத்தரவை மதிக்காத தலைமை தணிக்கை இயக்குனர் (ம) சிறப்பு இயக்குனரை கண்டித்தும் தணிக்கையாளர்களின் 13 அம்சக் கோரிக்கைகளைவலியுறுத்தியும் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை ஊழியர் சங்க மாநில தலைவர் ஆ.பாபுதலைமைதாங்க, மாநில அமைப்பு செயலாளர் கோவிந்தராஜ் அனைவரையும் வரவேற்றார். தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநில பொதுச்செயலாளர் வ.மாரிமுத்து துவக்கி வைத்து பேச மாநிலத் தலைவர் வெ.மகேந்திர குமார் போராட்டத்தின் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். மாநில பொருளாளர் திலகன் நிறைவுறையாற்றி பேசினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக நிதி அமைச்சர் உத்தரவுக்கு மாறாக ஊழியர்களை தொலைதூர தணிக்கை பணிக்கு அனுப்புவதை கைவிட வேண்டும். குறிப்பாக பெண் ஊழியர்களை 100 கிலோ மீட்டருக்கு மேல் தாண்டி தணிக்கை பணிக்கு அனுப்புவதை கைவிட வேண்டும்.

சொந்த காரண விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்புகளுக்கு அனுமதி தர வேண்டும். மாநில அரசு தணிக்கை துறையில் உள்ள 6300 தணிக்கை காலிபணியிடங்களை நிரப்ப வேண்டும்.

பேரூராட்சிகளில் தணிக்கை முறையை தனியார் மையமாக்கும் முயற்சியை கைவிட வேண்டும்.

பணியாளர்கள் ஓய்வு பெறும் நாளில் குற்ற குறிப்பாணையை வழங்குவதை கைவிட வேண்டும்.

புதிதாக உருவாக்கப்பட்ட வருவாய் மாவட்டங்களான திருப்பத்தூர் ராணிப்பேட்டை கள்ளக்குறிச்சி செங்கல்பட்டு மயிலாடுதுறை மற்றும் தென்காசி ஆகிய மாவட்ட அளவிலான தணிக்கை பணிக்கான திட்டங்களை வகுக்க வேண்டும் உள்ளிட்ட 13 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

# விவேகானந்தர் 125வது நினைவு தினம் அன்னபூஜை



கன்னியாகுமரி, ஜூலை. 5

கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திராவில் அன்னபூஜை கன்னியாகுமரி ஜூலை 5 சுவாமி விவேகானந்தரின் 125வது நினைவு நாளை முன்னிட்டு விவேகானந்தா கேந்திராவில் அன்னபூஜை நடந்தது.

வீரத் துறவி' என்று அனைவராலும் அழைக்கப்படும் சுவாமி விவேகானந்தர் 1902ம் ஆண்டு ஜூலை மாதம் 4ந் தேதி மரணம் அடைந்தார். அவருடைய 125 நினைவு நாளை முன்னிட்டு கிராம முன்னேற்ற திட்டத்தின் சார்பில் விவேகானந்தா கேந்திரா வளாகத்தில் உள்ள சபாகிரக அரங்கில் அன்னபூஜை நிகழ்ச்சி நேற்று நடந்தது. நிகழ்ச்சியில் சுவாமி விவேகானந்தர், ராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னைசாரதாதேவி, விவேகானந்தர் நினைவு மண்டபத்தை நிறுவிய ஏக்நாத் ரானடே ஆகியோரது உருவப்படங்கள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. படங்களுக்கு கேந்திர துணை தலைவர் நிவேதிதா, தளவாய்சுந்தரம் எம்எல்ஏ, கேந்திர இணை பொதுச்செயலாளர் ரேகாதவே, கேந்திர மண்டல நிர்வாக செயலாளர் ராதாதிதி ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து தென்மாவட்டங்களில் உள்ள விவேகானந்தா கேந்திர தொண்டர்கள் பொதுமக்களிடம் சேகரித்த சுமார் 10 டன் அரிசியை மலை போல் குவித்து வைத்து அதன் மேல் அன்னபூரணி விக்கிரகத்தை ஆவாஹனம் செய்து அன்ன பூஜை நடந்தது. அப்போது ஆதிசங்கரரின் அன்னபூர்ணா ஸ்தோத்திரம், ஸ்ரீமத் பகவத்கீதையில் உள்ள விஸ்வரூப தரிசன ஸ்லோகங்கள் ஆகிய வழிபாடுகள் நடந்தது. பூஜைக்கு பின்னர் அன்னபூரணி தேவிக்கு மங்கள ஆரத்தி எடு க்கப்பட்டது. தொடர்ந்து அனைவருக்கும் அன்ன தானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த கிராம முன்னேற்ற தொண்டர்கள், பள்ளி மாணவர்கள், கேந்திர நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கேந்திர நிர்வாக அதிகாரி அனந்த ஸ்ரீ பத்மநாபன் நன்றி கூறினார்.

# கிராமப்புற மக்களின் நலனுக்காக ஆர்ஓ குடிநீர் திட்டம் தொடங்கிய டொயோட்டா



சமூக நலன் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான தனது அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் (டிகேஎம்) நிறுவனம், கர்நாடக மாநிலம் துமகூரு மாவட்டத்தில் ரிவர்ஸ் ஆஸ்மோசிஸ் (ஆர்ஓ) குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழாவை நடத்தியது. இந்த நிகழ்ச்சியில், இந்திய அரசின் ரயில்வே மற்றும் ஜல் சக்தி துறை இணையமைச்சர் வி. சோமண்ணா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் மூத்த நிர்வாகிகளும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இந்தத் திட்டத்தின்கீழ், பெலிகெரே, கம்பேரஹட்டி, ஹோசஹட்டி, முட்லபால்யா, ஜுஞ்சப்பனஹட்டி மற்றும் சோமலபுரா ஆகிய ஆறு இடங்களில் மணிக்கு 500 லிட்டர் திறன் கொண்ட ஆர்ஓ குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படுகின்றன. இதன் மூலம், 29 கிராமங்களைச் சேர்ந்த ஆண்டு தோறும் சுமார் 9,200 கிராம மக்கள் பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான குடிநீரைப் பெறுவதுடன், நீர்வழி நோய்களைத் தடுக்கவும், பொது சுகாதாரத்தை மேம்படுத்தவும் உதவியாக இருக்கும்.

நிகழ்ச்சியில் பேசிய வி. சோமண்ணா, தூய்மையான குடிநீர் என்பது மக்களின் உடல்நலம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையாகும் என்றும், டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டாரின் இந்த முயற்சி கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பாக அமையும் என்றும் பாராட்டினார். டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டாரின் நாட்டுத் தலைவர் மற்றும் கார்ப்பரேட் விவகாரங்களுக்கான செயல் துணைத் தலைவர் விக்ரம் குலாட்டி, பாதுகாப்பான குடிநீர் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமை என்பதையும், சமூகத்தின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் நிலையானதிட்டங்களை நிறுவனம் தொடர்ந்து செயல்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

இதுவரை, நாடு முழுவதும் 312 கிராமங்களில் 3.5 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு பயனளிக்கும் வகையில் 51 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவியுள்ள டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார், சமூக உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சியை முன்னெடுக்கும் தனது உறுதிப்பாட்டை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறது.

# வடசேரி உழவர் சந்தை வளாகத்தில் இயற்கை வேளாண் அங்காடி கலெக்டர் துவக்கி வைத்தார்



நாகர்கோவில், ஜூலை. 5

நாகர்கோவில் வடசேரி உழவர் சந்தை வளாகத்தில் இயற்கை வேளாண் அங்காடியினை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று 4ம் தேதி துவக்கி வைத்து, பார்வையிட்டு கூறியதாவது:

தமிழக அரசு சார்பில் விவசாயிகளின் விளை பொருட்களைச் சந்தைப் படுத்தவும், இயற்கை சார்ந்த விவசாயத்தை ஊக்கப்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்ஒருபகுதியாக, ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமைகளில் வடசேரி உழவர் சந்தையில் 'ஆர்கானிக் ஃபார்ம்' எனப்படும் இயற்கை வேளாண் அங்காடி செயல்படும். நேற்று தொடங்கப்பட்ட இயற்கை அங்காடியில் இயற்கையாக விளைவிக்கப்பட்ட காய்கறிகள், பழங்கள், தேன், தேங்காய், தூய மல்லி, கட்டி சம்பா உள்ளிட்ட பாரம்பரிய அரிசி வகைகள், இயற்கை உரங்கள் மண்புழு உரம் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், மட்டி பழம் உள்ளிட்ட வாழைப்பழ வகைகள், பலா பழங்கள் மேலும் கண்களை கவரும் பூச்செடிகள் ஆகியவை விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது. சுமார் 80 விவசாயிகள் தங்கள் இயற்கை விளைபொருட்களை விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளனர். இது ஒரு தொடக்கம் மட்டுமே வரும் நாட்களில் இந்தச் சந்தையை இன்னும் சிறப்பாக மேம்படுத்தி, பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

இது விவசாயிகளுக்கு ஆரோக்கியமான போட்டியை உருவாக்கி, அவர்களின் தயாரிப்புகளை மேம்படுத்த உதவும். மேலும், நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் 'மாடித்தோட்டங்களை' அமைப்பதை ஊக்குவித்து வருகிறோம். இது குப்பைக்கழிவுகளைக் குறைக்கவும் உதவும். நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் மாடித்தோட்டங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். என கூறினார். நடைபெற்றநிகழ்ச்சியில் வேளாண்துறை இணை இயக்குனர் வாணி, மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் பத்ஹூ முகம்மது நசீர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை கீதா, விவசாய பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
05.07.2026



தூத்துக்குடி மாவட்டம் சிப்காட் தொழில் பூங்காவில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகள் குறித்து தூத்துக்குடி அலகு I& II, ஆகிய பகுதிகளை மாவட்ட ஆட்சியர் விஜு மகாஜன், அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டா ர்.உடன் துறை சார்ந்த அரசு அதிகாரிகள் உள்ளனர்



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், பாரியூர் அருள்மிகு கொண்டத்துக்காளியம்மன் திருக்கோயில் மண்டபத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில், கோபிசெட்டிபாளையம் மற்றும் நம்பியூர் பகுதிகளில் உள்ள ஒருகால பூஜை திருக்கோயில்களுக்கு பூஜை உபகரணங்களை திருக்கோவில் பூசாரிகள் மற்றும் அர்ச்சகர்களிடம் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் வழங்கினார்.அருகில் செயல் அலுவலர் ப.அனிதா, அறநிலைத்துறை ஆய்வாளர் கே.பழனிச்சாமி, முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் பி.எஸ்.முத்துவேலப்பன்,மாவட்டச் செயலாளர் பிரதீப்குமார்,முன்னாள் யூனியன் சேர்மன்கள் முத்துச்சாமி, மௌதீஸ்வரன்,குறிஞ்சிநாதன்,தம்பி சுப்ரமணியம், சபேசன்,முன்னாள் நகர் மன்ற துணைத்தலைவர் ஜி.கே.செல்வராஜ்,வெள்ளாளபாளையம்வாசு,அளுக்குளி பாண்டு உட்பட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம், மேரிமாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் (04.07.2026) நடைபெற்ற ஆசிரியர் தகுதித்தேர்வு ।க்கான தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

# ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட் தொழிற்பூங்காவில் 2 அமைச்சர்கள் ஆய்வு



ஈரோடு ஜூலை 5

ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட் தொழிற்பூங்காவில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் கீர்த்தனா அவர்கள் கைத்தறி, துணி நூல் மற்றும் காதித்துறை அமைச்சர் விஜய் பாலாஜி ஆகியோர் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், தொழிற்பூங்காவில் நடைபெற்று வரும் தொழில்துறை வளர்ச்சிப் பணிகள், உள்கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும், தண்ணீர் விநியோக அமைப்புகள், விரிவான சாலை வசதிகள், காவிரி நீரை ஆதாரமாகக் கொண்ட தண்ணீர் விநியோக ஏற்பாடுகள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவை குறித்து ஆய்வு நடந்தது.

மேலும் புதிய பொது சுத்திகரிப்பு நிலைய பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்று அமைச்சர்கள் கூறினர். பொதுமக்கள் சார்பில் வைக்கப்பட்ட கோரிக்கைகளை கேட்டு அறிந்து உரிய நடவடிக்கை எடுக்கும் படி அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டனர். மேலும், தொழில் துறை சூழலை புரிந்து கொள்ளவும், பிராந்தியத்தின் வளர்ச்சி சாத்தியக் கூறுகளை மதிப்பிடவும் சிப்காட் தொழில் பூங்காவில் நிலம் பெற்ற நிறுவன பிரதிநிதிகள் எழுப்பிய கோரிக்கைகளுக்கு தீர்வு காணுவது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து, சிப்காட்டில் உள்ள தனியார் நிறுவனங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர்சாந்தகுமார்,மாவட்டசுற்றுச்சூழல்பொறியாளர் ராஜ்குமார், சிப்காட் செயற்பொறியாளர் பகபதி, சிப்காட் திட்ட அலுவலர் சுஜா பிரியதர்ஷினி மற்றும் சிப்காட் அலுவலர்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் (05.07.2026)

**மேஷம்:** இன்று சந்திரனின் நற்பலன்களால் உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக இருந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். வேலை செய்யும் இடத்தில் உங்களின் திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். புதிய முதலீடுகளில் நிதானம் தேவை.

**ரிஷபம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபத்தைக் காண்பீர்கள். நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகளிடமிருந்து எதிர்பார்த்த உதவி சரியான நேரத்தில் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் அனுகூலமான போக்கு நிலவும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**மிதுனம்:** தொழில் நிமித்தமாக புதிய பொறுப்புகள் உங்களைத் தேடி வரும். கூட்டு வியாபாரத்தில் பார்ட்னர்களின் முழு ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்பத்தில் சுப காரிய பேச்சுவார்த்தைகள் கைகூடும். உடல் ஆரோக்கியத்தில் மட்டும் சிறு கவனம் செலுத்துங்கள்.

**கடகம்:** இன்று உங்களுக்குப் பொருளாதார ரீதியாகப் பொன்னான நாள். தடைப்பட்டிருந்த சம்பள பாக்கிகள் அல்லது வரவேண்டிய பழைய கடன்கள் கைக்கு வந்து சேரும். கலைத்துறையில் இருப்பவர்களுக்குப் புதிய நல்ல வாய்ப்புகள் அமையக்கூடும்.

**சிம்மம்:** இன்று உங்களுக்குச் சந்திராஷ்டமம் உள்ளதால் மிகுந்த கவனம் தேவை. மற்றவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானத்தைக் கடைப்பிடிக்கவும். புதிய பெரிய முதலீடுகள், முக்கியப் பத்திரங்களில் கையெழுத்திடுவது மற்றும் நீண்ட தூரப் பயணங்களைத் தள்ளி வைப்பது நல்லது.

**கன்னி:** தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய திட்டங்களைச் செயல்படுத்த முற்படுவீர்கள். கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலம் நல்ல செய்திகள் வந்து சேரும். கணவன் மனைவியிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**துலாம்:** வெளிவட்டாரப் பழக்கவழக்கங்களால் உங்களுக்குப் புதிய லாபங்கள் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்குப் பணியில் திறமைக்கேற்ற உயர்வுகளும் பாராட்டுகளும் கிடைக்கும். உற்றார்உறவினர்களின்வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும்.

**விருச்சிகம்:** தொலைதூரப் பயணங்களால் சிறு அலைச்சல்கள் இருந்தாலும், அதன் மூலம் நல்ல அனுகூலமான பலன்களையே அடைவீர்கள். குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் நீங்கி மனநிம்மதி உண்டாகும். பொருளாதார நிலை சீராக இருக்கும்.

**தனுசு:** மனைவி வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிட்டும். தாய்வழி உறவினர்களால் ஆதாயம் அடைய வாய்ப்புண்டு. உத்தியோகத்தில் உங்களின் மதிப்பு கூடும் என்றாலும், வேலைப்பளு சற்று அதிகமாகவே இருக்கும். வரவுக்கு ஏற்ற செலவுகளும் வந்து போகும்.

**மகரம்:** அதிர்ஷ்டம் நிறைந்த நாளாக அமையப் போகிறது. புதிய காரியங்களில் தைரியமாக இறங்கி வெற்றி காண்பீர்கள். உங்களின் நீண்ட நாள் கனவு ஒன்று நனவாக வாய்ப்புள்ளது. நவீனப் பொருட்கள் வாங்கும் யோகம் உண்டாகும்.


**கும்பம்:** சுபநிகழ்ச்சிகள் மற்றும் திருமணப் பேச்சுவார்த்தைகள்வெற்றிகரமாகமுடிவடையும். பெரிய மனிதர்களின் ஆதரவும், வழிகாட்டுதலும் உங்களுக்குக் கிடைக்கும். உத்தியோகம் மற்றும் வியாபார ரீதியாக நல்ல முன்னேற்றத்தைக் காணலாம்.

**மீனம்:** இன்று சந்திரன் உங்கள் ராசியில் சஞ்சரிப்பதால் ஆன்மீகக் காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். உங்களைப் பிடிக்காத எதிரிகள் கூட உங்களின் நேர்மையைக் கண்டு விலகிச் செல்வர். நீண்ட நாட்களாகத்தரவேண்டியகடன்களை அடைத்துச் சேமிப்பைத் தொடங்குவீர்கள்.




கிருஷ்ணகிரி நகராட்சி, காந்திரோடு, கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும் ஆதரவற்றவர்களுக்கான மன நல காப்பகம் அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம் இரண்டாம் ஆண்டு துவக்க விழாவை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் துவக்கி வைத்து மனநல காப்பகத்தில் சிகிச்சை முடிந்து நலம் பெற்ற இரண்டு நபர்களை சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தார். உடன் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.சந்திரசேகர், மருத்துவர்கள் மரு.மது, மரு.கிருபாவதி, மரு.மலர்விழி, திட்ட ஒருங்கிணைப்பாளர் .ஜலாலுதீன் ஆகியோர் உள்ளனர்.

# முதல் நாளில் ரூ 17 கோடி வசூலித்த ஆலியா பட்டின் "ஆல்பா"




பாலிவுட் நடிகை ஆலியா பட் முதன்மைக் கதாபாத்திரத்தில் நடித்து வெளியான 'ஆல்பா' திரைப்படத்தின் முதல் நாள் வசூல் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாலிவுட் திரையுலகின் முன்னணி நடிகைகளில் ஒருவரான ஆலியா பட் தற்போது இயக்குனர் ஷிவ் ராவைல் இயக்கத்தில் உருவாகியுள்ள 'ஆல்பா' திரைப்படத்தில் நடித்துள்ளார். பிரபல தயாரிப்பு நிறுவனமான யாஷ் ராஜ் பலிம்ஸ் இந்த படத்தை மிகப்பெரிய பொருட்செலவில் தயாரித்துள்ளது.

இதுவரை ஆண் கதாபாத்திரங்களை மையமாகக் கொண்டு பல்வேறு யுனிவர்ஸ் திரைப்படங்களை உருவாக்கி வந்த யாஷ் ராஜ் நிறுவனம், முதன்முறையாக பெண் கதாபாத்திரத்தை மையமாக வைத்து 'ஆல்பா' திரைப்படத்தை உருவாக்கியுள்ளது. இந்த படத்தில் பாபி தியோல், அனில் கபூர் மற்றும் ஷர்வரி வாக் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பிரபல நடிகர் ஹிருத்திக் ரோஷன் இப்படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளார்.

முதலில் கடந்த ஆண்டு டிசம்பர் 25ஆம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்த 'ஆல்பா' திரைப்படம், சில காரணங்களால் தள்ளிவைக்கப்பட்டது. ஜூலை 3ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தது.

இந்த நிலையில், 'ஆல்பா' திரைப்படம் முதல் நாளில் மட்டும் உலகம் முழுவதும் ரூ. 17.42 கோடி வசூலித்துள்ளதாக படக்குழு தெரிவித்துள்ளது. இந்தி மட்டுமின்றி தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளிலும் இந்தப் படம் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# "இதயம் முரளி திரைப்படத்தின் டிரெய்லர் வெளியானது




'இதயம் முரளி' படத்தின் டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்படம் வரும் ஜூலை 10ம் தேதி வெளியாகவுள்ளது.


தமிழ் சினிமாவில் குறிப்பிடத்தக்க நடிகரான அதர்வா 'பாணா காத்தாடி, பரதேசி, சண்டிவீரன்' போன்ற படங்களின் மூலம் ரசிகர்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்தவர். இவர் சுதா கொங்கரா இயக்கத்தில் வெளியான 'பராசக்தி' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வரவேற்பை பெற்றார். அதனை தொடர்ந்து, ஆகாஷ் பாஸ்கரின் இயக்கத்தில் 'இதயம் முரளி' என்ற திரைப்படத்தில் நடித்து வருகிறார். இதில் அதர்வாவுடன் இணைந்து பிரீத்தி முகுந்தன், கயாடு லோஹர், நட்டி நட்ராஜ், ரக்சன், தமன், நிஹாரிகா, பகத் பாசில் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். டான் பிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு தமன் இசையமைத்துள்ளார்.

'டிராகன்' படத்தில் ரங்கநாதனுக்கு ஜோடியாக நடித்து மக்கள் மத்தியில் பிரபலமடைந்தவர் கயாடு லோஹர் . தற்போது இளைஞர்களின் க்ரஸாகவே கயாடு லோஹர் மாறி உள்ளார். 'இதயம் முரளி' படத்தின் மூலம் மீண்டும் நடிகராக களமிறங்குகிறார் தமன். 'பாய்ஸ்' படத்துக்குப் பிறகு முழுமையாக இசையில் மட்டுமே கவனம் செலுத்தி வந்தார் தமன். ஆனால், இதில் இசையமைப்பாளராகவும் நடிகராகவும் நடித்துள்ளார்.

ஆகாஷ் பாஸ்கரன் தயாரிப்பில் 'பராசக்தி', 'இட்லி கடை' படங்கள் வெளியாயின. அந்தப் படங்களைத் தொடர்ந்து தனது இயக்கத்தில் உருவாகும் 'இதயம் முரளி' படத்தினை அவரே தயாரித்துள்ளார்.

இந்நிலையில், 'இதயம் முரளி' படத்தின் டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்படம் வரும் ஜூலை 10ம் தேதி வெளியாகவுள்ளது.

# உலகக்கோப்பை கால்பந்து: 2வது பாதியில் கோல் அடித்து பராகுவேவை வீழ்த்திய பிரான்ஸ்



உலகக்கோப்பை கால்பந்து போட்டி ஒன்றில், 2வது பாதியில் கோல் அடித்து பராகுவேவை பிரான்ஸ் வீழ்த்தியது.

சர்வதேச கால்பந்து கூட்டமைப்பான பிபா சார்பில் நடத்தப்பட்டு வரும் உலகக்கோப்பை கால்பந்து போட்டி தொடரில் லீக் சுற்று, 2வது சுற்று போட்டிகள் (நாக்அவுட் சுற்றுகள்) முடிந்து, 3வது சுற்று போட்டிகள் (ரவுண்ட் ஆப் 16) நடந்து வருகின்றன. இதில், வெற்றி பெறும் அணி காலிறுதிக்கு தகுதி பெறும்.

அந்த வகையில், அதிகாலை 2.30 மணிக்கு அமெரிக்காவின் பிலடெல்பியா மைதானத்தில் நடந்த 3வது சுற்று போட்டி ஒன்றில் பராகுவே மற்றும் பிரான்ஸ் அணிகள் விளையாடின. இரு அணிகளும் கோல் அடிக்க முயன்றன. எனினும், கோல் கீப்பர்கள் கோல் அடிக்க விடவில்லை.

பரபரப்பாக நடந்த இந்த போட்டியின் முதல் பாதியில் கோல் எதுவும் விழவில்லை. இதனால், 2வது பாதியில் கோலை எதிர்பார்த்து ரசிகர்கள் ஆவலுடன் காத்திருந்தனர்.

2வது பாதியில் பிரான்சின் கைலியன் எம்பாப்பே 70வது நிமிடத்தில் கோல் போட்டார். இதனால், 10 என்ற கணக்கில் பிரான்ஸ் முன்னிலையில் இருந்தது. அதன்பின்பு கோல் அடிக்கப்படவில்லை. போட்டி முடிந்த பின்னர் கூடுதல் நேரம் அளிக்கப்பட்டது. அப்போதும் கோல் விழவில்லை. இதனால், பிரான்ஸ் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

# மேஜர் லீக் கிரிக்கெட்: வாஷிங்டன் அபார பந்து வீச்சு சான் பிரான்சிஸ்கோ 126 ரன்களுக்கு ஆல் அவுட்




4வது மேஜர் லீக் டி20 கிரிக்கெட் தொடர் அமெரிக்காவில் கடந்த மாதம் 18 தேதி தொடங்கியது. இத்தொடரில் 6 அணிகள் பங்கேற்றுள்ளன. இதில் புள்ளிப்பட்டியலில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறும்.

இந்நிலையில், இத்தொடரில் இன்று நடைபெற்று வரும் 19வது லீக் ஆட்டத்தில் வாஷிங்டன் பிரிடம், சான் பிரான்சிஸ்கோ யுனிகான்ஸ் அணிகள் மோதி வருகின்றன.

இப்போட்டியில் டாஸ் வென்ற வாஷிங்டன் முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து சான் பிரான்சிஸ்கோ முதலில் பேட்டிங் செய்தது. ஆனால், வாஷிங்டன் அணியின் சிறப்பான பந்து வீச்சால் சான் பிரான்சிஸ்கோ அணி 19.3 ஓவரில் 126 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. பொறுப்புடன் ஆடிய அந்த அணியின் கேப்டன் மேத்தியூ ஷாட் அதிகபட்சமாக 39 ரன்கள் சேர்த்தார்.

சிறப்பாக பந்து வீசிய வாஷிங்டன் அணியின் ஜாக் எட்வர்டு 3.3 ஓவரில் 13 ரன்கள் மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதையடுத்து, 127 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் வாஷிங்டன் அணி களமிறங்கி விளையாடி வருகிறது.

# உலகக்கோப்பை கால்பந்து: பராகுவேபிரான்ஸ் போட்டியின் முதல் பாதியில் கோல் எதுவும் விழவில்லை



உலகக்கோப்பை கால்பந்து தொடரில் பராகுவேபிரான்ஸ் இடையேயான போட்டியின் முதல் பாதியில் கோல் எதுவும் விழவில்லை.

சர்வதேச கால்பந்து கூட்டமைப்பான பிபா சார்பில் நடத்தப்பட்டு வரும் உலகக்கோப்பை கால்பந்து போட்டி தொடரில் லீக் சுற்று, 2வது சுற்று போட்டிகள் (நாக்அவுட் சுற்றுகள்) முடிந்து, 3வது சுற்று போட்டிகள் (ரவுண்ட் ஆப் 16) நடந்து வருகின்றன. இதில், வெற்றி பெறும் அணி காலிறுதிக்கு தகுதி பெறும்.

அந்தவகையில், அதிகாலை 2.30 மணிக்கு அமெரிக்காவின் பிலடெல்பியா மைதானத்தில் நடந்த 3வது சுற்று போட்டி ஒன்றில் பராகுவே மற்றும் பிரான்ஸ் அணிகள் விளையாடின. இரு அணிகளும் கோல் அடிக்க முயன்றன. எனினும், கோல் கீப்பர்கள் கோல் அடிக்க விடவில்லை.

பரபரப்பாக நடந்த இந்த போட்டியின் முதல் பாதியில் கோல் எதுவும் விழவில்லை. இதனால், 2வது பாதியில் கோலை எதிர்பார்த்து ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.